**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.138/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.1 |
| Name | : | திருமதி. ருக்குமணி |
| Father's Name/Husband Name: | | திரு. கார்த்திக்கேயன் |
| Village | : | பாண்டகபாடி |
| Taluk | : | வேப்பந்தட்டை |
| Age | : | 38/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 23.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர் )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகள் அனைவரையும் தெரியும். எதிரி சுந்தரம் ஹோட்டல் வைத்து நடத்தி வருகிறார். மேலும், ஏலச் சீட்டு நடத்தி வருகிறார். சுந்தரம் நடத்தி வரும் ஏலச்சாட்டில் பாண்டகபாடியை சேர்ந்த நபர்கள் உறுப்பினர்களாக இருந்து வருகிறோம். அந்த சீட்டு ரூபாய் பத்து லட்சம் சீட்டாகும். அதில் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை ரூபாய் 50000/– வீதம் 20 தவணைகளாக கட்ட வேண்டும். மேற்படி சீட்டில் என் பெயரிலும், எனது கணவர் கார்த்திக்கேயன் பெயரிலும் எனது தங்கை ராதா என்பவர் பெயரிலும் நான் சீட்டு போட்டு வந்தேன். என் அம்மா அலமேலுவும், பூங்கொடியும் சேர்ந்து பாதிப்பாதியாக அவர்களது பெயரில் தனியாக சீட்டு போட்டு வந்தார். நான் 3 வது தவணை முடிந்தபிறகு நான் ஏலத்தில் சீட்டுத் தொகையை எடுத்துக் கொண்டேன்.

அதன் பின்பு 7 தவணைகளுக்கு நான் சீட்டு பணம் கட்டியிருந்தேன். நான் 11வது தவணை கட்டுவதற்காக காட்டை விற்று பணம் கட்டுவதாக சொல்லியிருந்தேன். 2024ம் வருடம் வைகாசி 21ம் தேதி நான் 11வது தவணை கட்ட வேண்டிய தேதியாகும். என்னால் அந்த பணத்தை கட்ட இயலவில்லை. அந்த பணத்தை கேட்டு எதிரி சுந்தரம் அடிக்கடி போன் செய்து, ஒழுங்கு புண்டையா பணத்தை எடுத்து வைங்கடி தேவிடியா ஊர வைத்தவளே என்று தகாத வார்த்தையால் பேசினார். எதிரி சுந்தரம் விறகு கட்டையால் என்னை அடிக்க வந்தார். எதிரி சுந்தரத்தின் மகன் பொன்னுசாமி தேவிடியா ஊர ஓத்தவளே என்று தகாத வார்த்தைகளால் பேசி செருப்பை கழட்டி முகத்திற்கு நேராக வீசினார். தேவிடியா நீயெல்லாம் எதற்கு உசுரோட இருக்கிற சுடுகாட்டில் நீயே குழித் தோண்டி படுத்துக்கடி, நீ செத்துப் போடி என்று எதிரி பொன்னுசாமி பேசினார். பெரியவடகரையைச் சேர்ந்த சீட்டில் உறுப்பினராக இருக்கும் சிவக்குமார் என்பவர் தேவிடியா ஊர ஓத்தவளே உன்ன அடிச்சா எவன்டி கேப்பான் பல்ல உடைப்பன்டி தேவிடியா புண்ட என்று மூன்று பேருமே அசிங்க அசிங்கமாக பேசி மானபங்கப்படுத்தி கையை பிடித்து கீழே தள்ளினார்கள். உன்னை அடிச்சா கேட்க யாரும் வர மாட்டாங்கன்னு திட்டினார்கள். என் தம்பி வெங்கடேசன் வடகரையிலிருந்து பாண்டகபாடிக்கு அழைத்து சென்றார். இச்சம்பவம் 01.07.2024 அன்று இரவு 9.15 மணிக்கு வடகரையில் உள்ள சுந்தரம் என்பவரது கடையில் நடந்தது. எதிரிகள் பெண் என்றும் பாராமல் பொதுமக்கள் முன்னிலையில் அசிங்கமாக பேசி மானபங்கபடுத்தி கொலைமிரட்டல் விடுத்ததினால் அன்று இரவு 10 மணியளவில் அவமானம் தாங்கமால் கலைகொல்லி மருந்தை குடித்து தற்கொலை செய்ய முயன்றேன். என் மகனும் என் அம்மாவும் 108 ஆம்புலன்ஸ் மூலமாக பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சேர்தனர். போலீசார் 04.07.2024 அன்று சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள். போலீசாரிடம் வழக்கு சம்பவம் குறித்து வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான் அளித்த புகார் சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.